**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**ABISHEKAPATTI - TIRUNELVELI- 627 012 -TAMIL NADU**

**Re-Accredited with B Grade By NAAC**



**Dr. S. SANTHOSH BABOO** Phone : 0462- 2338632 Fax: 0462 - 2334363

REGISTRAR email: registrar@msuniv.ac.in website: www.msuniv.ac.in

---

## செய்திக்குறிப்பு

### மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்தில் புதிய D. Pharm. படிப்பு துவக்கம்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், மருந்தாக்க வேதியியல் துறையில் (Department of Pharmaceutical Chemistry) இக்கல்வியாண்டு 2018-19 முதல் 2 வருட மருந்தியல் பட்டயப் படிப்பு (D. Pharm) இந்திய பார்மஸி கவுன்சில், புது டெல்லியின் அனுமதி பெற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் +2 ல் தேர்ச்சி (Physics, Chemistry and Biology/Botany & Zoology/ Mathematics) பெற்ற மாணவ, மாணவியர்கள் பயிலுவதற்கும், விண்ணப்பங்கள் பெறுவதற்கும், சமர்ப்பிப்பதற்குமான கடைசி நாள் 25.06.2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இப்படிப்பு முடித்தவர்கள், சென்னை, தமிழ்நாடு மாநில பார்மஸி கவுன்சிலில், தனது சான்றிதழை பதிவு செய்து, அரசு, தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் மருந்தாளுனராக (Registered Pharmacist) பணிபுரியவும், மருந்துப் பொருள் தயாரிப்பு நிறுவனங்களில், பல பணிகளுக்கும், குறிப்பாக மருந்தின் தரம் பரிசோதிக்கும் ஆய்வகராகவும் (Quality control), பணி கிடைக்க வாய்ப்புள்ளது. இப்படிப்பு இருந்தால்தான் மத்திய, மாநில அரசு அனுமதியுடன் தனியாக மருந்துக் கடை உரிமம் பெற்று நடத்தவும் முடியும். மேலும் D. Pharm. படித்தவர்கள் B.Pharm. போன்ற மேல்படிப்பில் நேரடியாக இரண்டாம் வருடத்தில் சேரவும் (Lateral entry) வாய்ப்புள்ளது.

மற்ற விபரங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்தில் நேரிலோ, தொலைபேசி 9965178458/ 9443991710 மூலமாகவோ அல்லது www.msuniv.ac.in என்ற இணையதளத்தின் மூலமாகவோ அறிந்துகொள்ளலாம் என்று பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் சே. சந்தோஷ் பாபு அவர்கள் அறிவிக்கின்றார்.

**பதிவாளர்**